| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>தங்கராஜ் | அ.வ.எண். 117/2016 | 05.08.2024 |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி 1975 லேயே 3 கிரையப்பத்திரத்தின் மேல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மொத்தம் 3 ஏக்கர் 6 சென்ட் கிரையம் பெற்றார். நான் அந்த கிரையப்பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் கம்மி, ஜாஸ்திக்கு உட்பட்டு என கண்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனது மகளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து பின்னிட்டு ரத்து செய்தாரா என்றால் ஆவணமே எழுதவில்லை. சாகுபடி, அடங்கல் நான் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தரிசாக தான் உள்ளது அதனால் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி சோலார் பேனல் போட்டுள்ளாரா என்றால் அவருடைய இடத்தில் போட்டுள்ளார். நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட குளறும்படியினால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கு சொத்து எனது சுவாதீனத்தில் இல்லை என்றும், 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியை மன ரீதியாக காயப்படுத்த வேண்டுமென்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சொத்தை நான் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.